செ.வெ.எண்: 99 நாள்:31.10.2018

**கரூர்மாவட்டம்**

**கரூர் மாவட்டத்தை வந்தடைந்த ஆரோக்கிய பாரத பயணத்தின் மிதிவண்டி குழுவினரை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ் அவர்கள் வரவேற்று வாழ்த்தினார்**

அதன் விபரம் வருமாறு:

மகாத்மா காந்தியடிகளின் 150 வது பிறந்த தினத்தை மிகச்சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற பாரத பிரதமர் அவர்களின் உயரிய நோக்கத்தின் அடிப்படையிலும், இந்திய உணவு தர நிர்ணய ஆணைய வழிகாட்டுதலின்படியும் ஆரோக்கிய பாரத பயணம் (Swasth Bharat Yatra) என்ற தலைப்பில் மிதிவண்டி பயணம் உலக உணவு தினமான 16.10.2018 அன்று துவங்கப்பட்டு, இந்தியா முழுவதும் 100 தினங்கள் 6,500 கி.மீ. பயணம் மேற்கொண்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி தலைநகர் புதுதில்லியில் நிறைவடையும் வகையில் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பல்வேறு நகரங்களைக்கடந்து, திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து இன்று(31.10.2018) கரூர் வந்தடைந்த மிதிவண்டி பயண குழுவினரை அரவக்குறிச்சி சுங்கச் சாவடியில் மாவட்ட உணவுப்பாதுகாப்புத்துறையினர் வரவேற்றனர். பின்னர் அரவக்குறிச்சி வட்டாரத்திற்குட்பட்ட அரவை ஆனந்த மஹாலில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து இன்று மாலை சுக்காலியூர் பகுதியில் உள்ள குருவித்யாலயா பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த உணவுப்பொருட்கள் குறித்த கண்காட்டியினைப் பார்வையிட்ட மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், அங்கு வந்தடைந்த மிதிவண்டிக்குழுவினரை வரவேற்று அவர்களுக்கு மெடல்களையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினார்.

நாளை (01.11.2018) காலை 07.00 மணிக்கு கரூர் பேருந்து நிலைய ரவுண்டானா முதல் கோவை ரோடு ரவுண்டானா வரை, சுதந்திர போராட்ட தியாகிகள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளும், பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுகள் குறித்த விழிப்புணர்வு நடைபயணம் நடைபெறும். அதன் தொடர்ச்சியாக, மதுரை ரோட்டில் அமைந்துள்ள வள்ளுவர் மஹாலில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் நடைபயணத்தில் பங்கேற்போரின் சிறப்புரை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பின்னர், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளான பாரம்பரிய உணவுகள் காட்சிப்படுத்துதல், மருத்துவ முகாம்கள், சத்தான மற்றும் பாதுகாப்பான உணவுகள் குறித்த நிகழ்ச்சிகள், நெருப்பில்லா சமையல் மற்றும் உப்பில் அயோடின் சோதனை போன்றவை, சேலம் ரோட்டில் அமைந்துள்ள பரணி பார்க் பள்ளி மற்றும் தாந்தோனிமலை அரசு கலைக் கல்லூரியிலும் காலை முதல் மதியம் வரை நடைபெறும். மேலும், மாலை நேரத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தாந்தோனிமலை அரசுக் கலைக்கல்லூரியில் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் சிறப்பான முறையில் பங்களிப்பினை வழங்கியவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

மேலும், காலை முதல் மதியம் வரை அரசு கலைக் கல்லூரியில் மாணவர்கள் கொண்டு வரும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து உடனடி பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கப்படும் மற்றும் மதியம் முதல் மாலை வரை கரூர் பேருந்து நிலையம் அருகில் பொதுமக்கள், தாங்கள் கொண்டு வரும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து உடனடி பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கப்படும் நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிகழ்ச்சியில் உணவுப்பாதுகாப்புத்துறை அலுவலர் மரு.புஷ்பராஜ், சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.நிர்மல்சன், வட்டாட்சியர் திரு.ஈஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.